**கவனிக்க.**-12.04.2022 ஆந் திகதிய 2276 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2277 - 2022 අප්‍රේල් මස 22 වැනි සිකුරාදා - 2022.04.22

*2277 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 168 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க.**- ஜயமக அபிவிருத்தி சமூக சேவைகள் அறக்கட்டளை மன்றம் ( கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2022, ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, மே மாதம் 13ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, ஏப்பிறல் மாதம் 29ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

**மக்கள் வங்கி**

**குடியியல் நடவடிக்கை முறை சட்டக்கோவையின் 255 ஆம் பிரிவுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படுகின்ற பிசுக்கால் மூலம் ஏல விற்பனை பொலன்னறுவை மாவட்ட நீதிமன்றத்தில்**

வழக்கிலக்கம்:
585/ DR/18
தன்மை: பணம்
எழுத்தாணை:
இலக்கம்: 376/20

இல.75, சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரியில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள மக்கள் வங்கி

*வழக்காளி*

*எதிர்*

கரலிஞ்ஞவாஸ் ஜயசூரிய படபெதிகே பிரசாத் ஹேமந்த அல்லது பிரசாத் ஹேமந்த ஜயசூரிய ( சிஹல ரைஸ் புரொடக்ட் ( பிரைவேட்) லிமிடெட், பணிப்பாளர்), இல.99/1, கனன்கொல்ல, பராக்கிரம சமுத்திரம், பொலன்னறுவை

*எதிராளி*

பொலன்னறுவை மாவட்ட நீதிமன்றத்தில் 585/ DR/18, என்ற இலக்க வழக்கில் 2019.05.17ஆந் திகதி வழங்கப்பட்ட தீர்வைக்கு ஏற்ப, எனக்கு வழங்கப்பட்டுள்ள ஆதனத்தை தடை ஏற்படுத்தி விற்பனை செய்தல் எழுத்தாணையின் அடிப்படையில் வழக்காளிக்கு வருமதியான ரூபா1,904,943.69 தொகையையும் மற்றும் அத்தகைய தொகையை அறவிடுவதற்காக வழக்காளிக்கு ஏற்படுகின்ற செலவினங்களையும் எதிராளியிடமிருந்து மீட்டுக்கொள்வதற்காக 2020.10.14 ஆந் திகதி பொலன்னறுவை மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் மூலம் தடையேற்படுத்தப்பட்ட அத்தகைய வழக்கின் எதிராளிக்கு சொந்தமான கீழே அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்ட அசைவுள்ள ஆதனங்களை,

2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதி காலை 11.30 மணிக்கு அத்தகைய ஆதனங்கள் அமைந்துள்ள இல. 99/1, கனன்கொல்ல, பராக்கிரம சமுத்திரம், பொலன்னறுவை என்ற முகவரியில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறிவித்தல் விடுக்கின்றேன்.

**அட்டவணை**

தடையேற்றபடுத்தப்பட்டுள்ள ஆதனங்கள்

1. தொஷிபா 32 அங்குல தொலைக்காட்சி பெட்டி 01
2. இனோவெக்ஸ் வானொலி 01
3. தொலைக்காட்சி வைக்கும் ஸ்டேன்ட் 01
4. மஞ்சள் நிற பிளாஸ்திக் கதிரைகள் 03
5. நாற்காலியுடன் 06 துண்டுகளைக் கொண்ட பலகைக் கதிரைத் தொகுதி
6. கதிரையொன்றுடன் எழுதும் மேசை 01
7.06 கதிரைகளுடன் கண்ணாடி உணவு மேசை 01
8. 05 துண்டுகளைக் கொண்ட தேக்க கதிரைத் தொகுதி 01
9. எல்ஜீ ஒற்றைக் கதவு குளிர் சாதனப் பெட்டி 01
10.சிங்கர் தையல் இயந்திரம் 01
11. செம்சுங் 40 அங்குல தொலைக்காட்சி டீவீடீ பிளேயர்
12. கணினித் திரையுடன் கூடிய சீசீடீவீ கெமரா முறைமை
13. 4X4 தொலைக்காட்சி ஸ்டேன்ட் 01
14. MIRA தரை மின்விசிறி 01
15. 06 அடி இரட்டைக் கதவு பலகை அலுமாரி
16. JAC கொதிநீர் ஷவர் 01
17. ரிச் பவர் தரை மின்விசிறி 01
18.06 அடி பலகை கண்ணாடி அலுமாரி 01

*19. 06 அடி இரட்டைக் கதவு உருக்கு அலுமாரி 01*
*20.அலுமாரியுடன் கூடிய இஸ்திரிக்கை பலகை 01*
*21.* SL *3901-* AAG *தரைத் தராசு* 01
*22.* Royal *தரைத் தராசு 01*
*23.*IDEN- FAN *கல் மண் அகற்றுகின்ற இயந்திரம் 01*
*24.* FAN - DE SPNIER SEAKER *சல்லடை*
*25. நவீன உதிரிப்பாகங்களுடன் கூடிய நெல் அரைக்கும் இயந்திரம் 01*
*26. மாவு அரைக்கும் இயந்திரம் 01*
*27.சிறிய மின் தராசு 01*

*பதிவாளர்,*
*ஏ.எஸ். திசாகே,*
*பிரதிப் பதிவாளர்,*
*பிரதி பிசுக்கால் /மரணசாதன அலுவலர்.*

*மாவட்ட/நீதிவான் நீதிமன்றம்,*
*பொலன்னறுவை.*

*04- 522*

---

## அம்பாந்தோட்டை மாவட்ட நீதிமன்றத்தின் அடமான வழக்குத் தீர்ப்பின் கீழ் பிசுக்கால் ஏல விற்பனை

*செலான் வங்கி பீஎல்சீ ( முன்னர் செலான் வங்கி லிமிடெட் என அறிமுகப்படுத்திய)*
*செலான் டவர்ஸ் , இலக்கம் 90, காலி வீதி, கொழும்பு 03*

*வழக்கு இல:*
*எம்.பி.7786*

*முறைப்பாட்டாளர்*

*எதிராக*

*ராமநாயக்க பிரேமசந்திர,*
*ராமநாயக்க ஸ்டோர்ஸ்,*
*சித்ராகலை, அம்பலாந்தோட்டை*

*எதிர்வாதி*

*மேலே குறித்த இலக்கம் கொண்ட வழக்கின் 2016.09.27 ஆந் திகதி அன்று உள்ளீடு செய்யப்பட்ட சமரசப் பிரகடனத்தின்படியும் மற்றும் அதில் 2018.10.10 ஆந் திகதியன்று எனக்கு வழங்கப்பட்ட விற்பனை ஆணையின்படியும் , மேலே பெயர் குறித்த எதிர்வாதியினால் முறைப்பாட்டாளரான வங்கிக்கு செலுத்த வேண்டிய எழுபத்தி ஏழு இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து தொளாயிரத்து ஐம்பத்தி மூன்று ரூபாவும் பத்தொன்பது சதத்தையும் (ரூ.77,97,953.19) தீர்ப்பு அறிக்கையின் மொத்த தொகையையும் செலுத்தி முடியும் வரை சட்ட வட்டியையும் வழக்குக் கட்டணத்தையும் இது வரை செலுத்தப்படாததால் அத் தொகை மற்றும் ஏல விற்பனை செலவு ஆகியவற்றை அறவிடப்படுவதற்காக குறித்த வங்கிக்கு அடமானமாக வைக்கப்பட்ட கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள எதிர்வாதிக்கு உரித்தாகிய சொத்து மற்றும் வளாகம்.*

*2022ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு சொத்து இருக்கும் இடத்தில் என்னால் பிசுக்கால் ஏல விற்பனையில் விற்கப்படும்.*

***சொத்துக்கான அணுகல்.-*** *அம்பாந்தோட்டை, அம்பலாந்தோட்டை பிரதான வீதியின் அம்பாந்தோட்டை பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து அம்பலாந்தோட்டை நோக்கி 14 கிலோ மீற்றர் சென்றவுடன் 230 கிலோமீற்றர் தூண் அமைந்துள்ள மானஜ்ஜவா சந்தியிலிருந்து வலதுபுறம் திரும்பி, கொக்கல வீதியில் 1.2 கிலோமீற்றர் சென்றால், வீதிக்கு அருகே இடதுபுறத்தில் இந்தச் சொத்து அமைந்துள்ளன.*

***பணம் செலுத்தும் முறை.***-*விலை முடிவு செய்யப்பட்டவுடன் வெற்றிகரமான கொள்வனவாளரினால் கீழே குறித்துள்ள விதத்தில் பணமாக செலுத்த வேண்டும்.*
*1. கொள்முதல் விலையில் இருபத்தைந்து சதவீதம் (25%);*

2. உள்ளூராட்சி அதிகார சபைக்கு விற்பனை வரி (தற்போதுள்ள சட்டத்தின்படி);
3. ஏல விற்பனையாளரின் கொமிஸ் விற்பனை விலையில் நூற்றுக்கு இரண்டரை சதவீதம் (2.5%);
4. மதிப்பீட்டு கட்டணம்;
5. விற்பனை விதிமுறைகளின் சான்றிதழுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000 ரூபா;
6. வர்த்தமானிக் கட்டணம், நாளிதழ் வெளியீட்டு செலவுகள் உட்பட ஏலத்தின் முழு விளம்பரச் செலவும் மற்றும் அனைத்து ஏலச் செலவுகளும் உடனடியாக பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
காசோலைகள் ஏற்றுக்கொள்ளபட மாட்டாது.

கொள்வனவு விலையின் மிகுதி 75% வீதத்தை ஏல விற்பனை திகதியன்று 30 நாட்களுக்குள் அம்பாந்தோட்டை மாவட்ட நீதிமன்றத்தின் MB 7786 ஆம் இலக்க வழக்கிற்கு வைப்புச் செய்தல் வேண்டும். இல்லையெனில் ஏற்கனவே செலுத்திய கொள்முதல் விலையில் 25% பணத்தை மீண்டும் செலுத்தாதிருக்கவும் சொத்தை மறு விற்பனை செய்யவும் புகார் அளிக்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

07. உரிமை உறுதி ஆய்வு, செலான்வங்கி பிஎல்சி, பிராந்திய அலுவலகம் (தெற்கு மாகாணம்), இலக்கம் 39 பீ, பஹல டிக்சன் வீதி,வளவ்வத்தை, காலி.

தொலைபேசி இல. 091- 2235398.

மேலதிக விபரங்களுக்கு:- செலான்வங்கி பிஎல்சி, அம்பாந்தோட்டைக் கிளை,

மேலும் தகவலுக்கு:- செலான் வங்கி பிஎல்சி, அம்பாந்தோட்டைக் கிளை , இலக்கம் 57A, 57A1, 57A 1/1 , பிரதான வீதி, அம்பாந்தோட்டை.
தொலைபேசி இல. 047- 2220518 மற்றும் 047- 2220507.

**மேலே குறித்த அட்டவணை**

தென் மாகாணத்தின், அம்பாந்தோட்டை மாவட்டத்தின் கிழக்கு கிருவாப்பற்று, அம்பாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவின், அம்பாந்தோட்டை பிரதேச சபை எல்லைக்குள், இலக்கம் 128, மானஜ்ஜாவ கிராம அலுவலர் பிரிவில், கரிவிலவில் அமைந்துள்ள கரிவில எனப்படும் காணி 2008.02.16 ஆந் திகதி உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. டபிள்யூ. எஸ். கே. விக்னராஜா என்பவரால் அளவிடப்பட்டு தயாரிக்கப்பட்ட பட இலக்கம் Ha 851 இல் லொட் 02 A என பிரிக்கப்பட்ட காணித்துண்டிற்கான எல்லைகள்-

வடக்கு: டி. ராமநாயக்க மற்றும் எஸ் ராமநாயக்க உரிமை கோரும் காணி, பட இலக்கம் 6801 மற்றும் பட இலக்கம் Ha 851 இல்

லொட் 02;
கிழக்கு: வீதி;
தெற்கு : பட இலக்கம் Ha 6851 இல் லொட் 03;
மேற்கு: டி. ராமநாயக்க மற்றும் எஸ். ராமநாயக்க உரிமை கோரும் காணி, பட இலக்கம் 6801 இல் லொட் 01 மற்றும் பட இலக்கம் Ha 851 இல் லொட் 01பீ.

ஆகிய எல்லைக்குள் அமைந்துள்ள 01 றூட், முப்பத்தியெட்டு தசம் ஐந்து பேர்ச்( 0ஏ.01றூ.38.5பே) அல்லது 0.1986 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணியில் அமைந்துள்ள நிலப்பகுதி மற்றும் அனைத்து மரங்கள், கட்டிடங்கள் உட்பட.

இந்தக் காணி அம்பாந்தோட்டை காணி பதிவேட்டில் பாகம் 1 D /43/271 பத்திரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

என்.எச்.பி.பீ. ஆரியரத்ன,
உத்தரவுபெற்ற
ஏலவிற்பனையாளர்,
மதிப்பீட்டாளர்,
மற்றும் நீதிமன்ற ஆணயாளர்.

இலக்கம் 107, உபதிஸ்ஸ மாவத்தை,
வல்கம தெற்கு, மாத்தறை.
தொலைபேசி : 0711885677/0773281956,
2022.03.21.

04- 712

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.